# உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான வழிகாட்டிக் கைநூல்



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இரண்டு தசாப்த கால யுத்தத்தின் விளைவாக வட கிழக்கு மக்கள் பல இழப்புகளைச் சந்தித்து, பல இன்னல்களின் மத்தியில் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சிலர் தமது உறவினர் நண்பர்களின் வீடுகளில் வசித்து வந்தனர் பலர் நலன்புரி நிலையங்களை தமது வாழிடமாகக் கொண்டனர். இவ்வாறு இடம்பெயர்ந்த ஆட்களுக்காக அரசாங்கம் சில நிவாரண உதவிகளை வழங்கியது. இவற்றை வழங்க சில வெளிநாட்டு நிறுவனங்களும் அரசுடன் இணைந்து செயற்பட்டன.

உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த மக்கள் தமது வாழிடங்களை விட்டு வெளியேறும் போதும் சில முக்கியமான பிறப்பு, இறப்பு ஆவணங்களை இழந்திருக்கலாம் தொலைத்திருக்கலாம். அல்லது அவை இருக்குமிடமே தெரியாமல் இருக்கலாம்; சிலவேளைகளில் நலன்புரி நிலையங்களில் வாழும்போது புதிய பிறப்புகள், இறப்புகள் திருமணங்கள் என்பன பதியப்படச் சந்தர்ப்பம் இல்லாது போயிருக்கலாம். இக்கையேட்டில் இவை தொடர்பான விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச நிவாரண உதவிகள் பெறுவது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இந் நிவாரண உதவிகளைப் பெறுவதற்கு இடம்பெயர்ந்த ஆட்கள் உரித்துடையவர்கள்.

இவ்விடம்பெயர்ந்த ஆட்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு உதவ என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இடம்பெயர்ந்த ஆட்களுக்கான செயற்றிட்டத்தை நடாத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இக் கைநூல் இடம்பெயர்ந்த ஆட்கள் மீளக் குடியேறுவோருக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் சுருக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளது.

**நன்றி**

**© தயாரிப்பு : வாசுகி தேவதாஸ், சட்டத்தரணி**
**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.**
**இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டம்.**
**கொழும்பு -07.**
**24.12.2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 1996ம் ஆண்டின் 21ம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவின் பணிகளும் தத்துவங்களும், பின்வருமாறு

**(அ) ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்.**

i. அடிப்படை உரிமைகள் தொடர்பிலும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் அவற்றை அனுசரித்தல் என்பவற்றை ஊக்குவித்தல் தொடர்பிலும் அரசியலமைப் பின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப் படுத்தும் நோக்கத்துடன் நிறைவேற்றுத்துறை மற்றும் நிர்வாகத்துறை செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் கண்காணித்தல் ;

ii. அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை என்பன தொடர்பிலான முறைப் பாடுகளையிட்டு விசாரணை செய்தலும் புலனாய்வு செய்தலும் அத்துடன் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கிணங்க மத்தியஸ்தம் மூலமும் இணக்கத்தின் மூலமும் அவற்றை தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தலும் ;

iii. அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லுவதிலும், ஊக்குவிப்பதிலும் பாதுகாப்பதிலும் சட்டவாக்க, நிர்வாகப் பணிப்புரைகளையும் நடபடி முறைகளையும் தொகுத்தமைப் பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும், உதவுதலும்;

iv. தேசியச் சட்டங்களும் நிர்வாகச் செயல்முறைகளும், சர்வதேச மனித உரிமைகளுக்கும் வழமைகளுக்கும் நியமங்களுக்கும் அமைந்ததாயுள்ளன என்பதனை உறுதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தல் :

v. மனித உரிமைகள் துறையில் பொருத்தனைகளுக்கும் வேறு சர்வதேசச் சாதனங்களுக்கும் ஒப்பளிப்பதற்கான அல்லது இசைவதற்கான அவசியத்தின்மீது அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தல்; அத்துடன்

vi. மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தலும் அது தொடர்பிலான கல்வியை ஏற்பாடு செய்தலும்.

**ஆ. ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு பின்வரும் தத்துவங்கள் எதனையும் அல்லது அவை அனைத்தை யும் பிரயோகிக்கலாம் -**

i. இச்சட்டத்தின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப் படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை எதனையும் புலனாய்வு செய்தல் ;

ii. இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் அவர்களுக்குக் கையளிக்கக்கூடியவாறான ஆணைக்குழுவின் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினதான உபகுழுக்களை மாகாண மட்டங்களில் நியமித்தல்;

iii. ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கும் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது உடனடி யாக மீறப்படவுள்ளமை தொடர்பிலான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையிடுதல் ;

iv. நீதிமுறைக் கட்டளையொன்றினாலோ அல்லது வேறு வகையிலோ தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆட்க ளின் நலனை, அத்தகைய தடுப்புக் காவலிடங்களை ஒழுங்காக பரிசீலனை செய்வதன் மூலம் கண்காணித்தலும் அத்துடன் அவர்களின் தடுப்புக்காவல் நிலைமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய விதப்புரைகளைச் செய்தலும் ;

v. உயர் நீதிமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் எடுக்குமாறு பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல்;

vi. நிகழ்ச்சித் திட்டங்கள். கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்துவதன்மூலம் மனித உரிமைகள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் அத்துடன் அவைபற்றிய விழிப்பு நிலைமை மேம்படுத்தல் மற்றும் அத்தகைய ஆராய்ச்சியின் பெறுபேறுகளைப் பரப்புதல் அத்துடன் விநியோகித்தல்;

vii. இன்னலுற்ற ஆள் ஒருவருக்கு அல்லது இன்னலுற்ற ஆள் ஒருவரின் சார்பில் செயலாற்றுகின்ற ஆள் ஒருவருக்கு. 13 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு ஒன்றைச் செய்வதில் அவரால் நியாயமாக உறப்படக்கூடிய செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதுமானதான அத்தகைய பணத்தொகையை அதன் பூரண தற்றுணிபில் வழங்குதல்;

viii. அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

கடந்த இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 800,000 பேர் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தவர்களாயுள்ளனர். ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய அண்மைய அறிக்கையின் படி இதில் 540,000 பேர் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவோ அல்லது சொந்த இடங்களுக்கு செல்லவோ இல்லை. இதன் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே பெரும்பாலான நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதனைவிட பலர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்பையும், உரிமை களையும் உறுதிப்படுத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்துடன் இணைந்து உள்ளக இடம்பெயர்ந்தோருக்கும் மீள்வருவோருக்குமான தேசிய பாதுகாப்பும் மனிதாபிமான உதவிகளுக்கான செயற்றிட்டத்தை நடாத்தி வருகின்றது.

உள்ளக இடம்பெயர்ந்தோர் உரிமைகள் மீறல் தொடர்பில் முறைப்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்க இக்கையேட்டின் பின் பக்கத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகளும் தொலைபேசி இலக்கங்களும் தரப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் எனப்படுபவர்கள் யார்?



யுத்தம் அல்லது வேறு இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஒருவர் தனது வாழிடத்தை விட்டு வெளியேறி உள் நாட்டிலேயே வேறு இடத்தில் தங்கியிருத்தல். அவ்வாறு நாட்டை விட்டு வெளியேறும் போது அவர் அக்தி என்ற அந்தஸ்த்தைப் பெறுகின்றார்.

இவ்வாறு இடம்பெயரும் ஆட்களின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் பாதுகாக்கவும் அவர்களின் நலனை மேம்படுத்தவும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கான நெறிமுறை விதிகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் உருவாக்கப்பட்டது.

இவ் விதிகளின் சுருக்கம் இங்கு கொடுக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறை விதிகள்

## பிரிவு 01 : பொது விதிகள்

### விதி

1. உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் ஒருநாட்டின் அனைத்து மக்களும் அனுபவிக்கும் சுதந்திரமும் உரிமைகளும் இடம்பெயர்ந்த மக்களும் அனுபவிப்பதற்கு உரிமை உண்டு.

2. இவ்விதிகளை அதிகாரிகளும் குழுக்களும் பேதங்காட்டாது கடைப்பிடித்தல் வேண்டும்.

3. இடம்பெயர்ந்த மக்களுக்குரிய பாதுகாப்பும் மனித நேய உதவிகளையும் வழங்கும் கடமை தேசிய அதிகாரிகளைச் சார்ந்தது. இதைப் பெறுவதற்குரிய உரிமை இம்மக்களுக்குண்டு.

4. இடம்பெயர்ந்த மக்களை எந்தவித பாகுபாடுமின்றி கவனித்தல் வேண்டும்.

## பிரிவு 02 : இடம்பெயராது பாதுகாத்தல் தொடர்பான விதிகள்

5. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் மனித உரிமைகள், மனித நேயச்சட்டங்களைப் பேணி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் இடம்பெயராது தடுத்தல் வேண்டும்.

6. சொந்த இடத்திலிருந்து தனது சுயவிருப்பமின்றி நிர்ப்பந்தத்தின் பெயரில் செல்வதிலிருந்து பாதுகாப்பது ஒவ்வொரு மனித பிறவிக்கும் உண்டு.

7. இடம்பெயர்வு அவசியம் எனக் கருதப்படுமிடத்து அதிகாரிகள் இடம்பெயர்வுகளிலிருந்து தடுப்பதற்குரிய மாற்று வழிகள் இல்லை என உறுதி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பாதிக்கப்பட்டவரின் உயிர், கௌரவம், சுதந்திரம், பாதுகாப்பு ஆகியவை பாதிக்கும் வகையில் இடம்பெயர்வு மேற்கொள்ளப் படலாகாது.

9. சொந்த மண்ணில் பற்றுடன் வாழ்வோரை இடம்பெயராது காக்கும் விசேட கடப்பாடு அரசாங்கத்திற்குரியதாகும்.

## பிரிவு 03: இடம்பெயரும் சமயத்தில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு சார்ந்த விதிகள்

10 இனக்கொலை, படுகொலை, நீதி நியாயமின்றி சாகடித்தல், காணாமற் போதல், மரண அச்சுறுத்தல், மரணத்தில் முடிவுறும் கடத்தலிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை பாதுகாத்தல் வேண்டும்.

11 பாலியல் வல்லுறவு, அங்க சிதைவு, காட்டுமிராண்டித்தனமாக அல்லது மானபங்கம் ஏற்படும் முறையில் நடாத்தல் அல்லது தண்டித்தல், அடிமையாக நடத்துதல், பீதி அல்லது பயத்தை உண்டாக்கும் எண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் வன்செயலில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை பாதுகாத்தல் வேண்டும்.

12 உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை பாகுபாடான முறையில் கைது செய்தல், தடுத்து வைத்தல், பணயக்கைதிகளாக வைத்தல் தடுக்கப்பட வேண்டும்.

13 இடம்பெயர்ந்த பிள்ளைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் போரணியில் சேர்க்கவோ, போர் நடவடிக்கையில் பங்குபற்றும்படி கோரவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது.

14 உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வசிப்பிடங்களை தெரிவு செய்யும் உரிமையும் சுதந்திரமும் அவர்களிற்குண்டு.

15 உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் நாட்டின் வேறெந்த பாகத்திலோ நாட்டைவிட்டு வெளியேறி புகலிடம் தேடவோ உரிமையுடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் காணாமற்போன உறவினர்களின் கதி என்னவென அறியும் உரிமை, இறந்தவர்களின் உடலை அடையாளம் காட்டல் மற்றும் எடுத்துச் செல்லும் உரிமை, அடக்கதளங்களை தரிசிக்கும் உரிமை உடையவர்கள்.

17 இடம்பெயர்ந்து பிரிந்த குடும்பங்களை கூடிய விரைவில் மீண்டும் ஒன்று சேர்க்க உதவ வேண்டும். குறிப்பாக பிள்ளைகளை ஒன்று சேர்த்து வைப்பது முக்கியமாகும்.

18 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய அத்தியாவசிய தேவைகளாகிய உணவு, குடிநீர், உறைவிடம், ஆடை, வைத்திய சுகாதார தேவை போன்ற வசதிகளை வழங்க வேண்டும்.

19 உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் முடிந்த வரையில் காயமுற்றோரிற்கு வைத்திய உதவிகளை உடனடியாக செய்தல் வேண்டும். ஊனமுற்றோர் பெண்களின் ஆரோக்கியம், தொற்று நோய்கள் பரவாது தடுத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

20 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய ஆவணங்களை பெற்றுக்கொடுப்பதிலும் தொலைந்துபோன ஆவணங்களை ஆண் பெண் வித்தியாசமின்றி பெற்றுக் கொடுப்பதிலும் அதிகாரிகள் கவனம் செலுத்தல் வேண்டும்.

21 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

22 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுடைய சிந்தனை, கருத்து வெளிப்படுத்தல், பேச்சு சுதந்திரம், மதம், தொழில், சமுதாய விவகாரங்கள் சமமாக பங்குபற்றல், வாக்களிப்பு, தாய் மொழியில் உரையாடுதல் என்பவற்றிற்கு வாய்ப்பளித்தல்.

23 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய கல்வி வசதிகளை அளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு 04 : மனித நேய உதவிகள் தொடர்பான விதிகள்

24 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய மனித நேய உதவிகள் பாகுபாடின்றி அளிக்கப்படுதல் வேண்டும். வேறு காரியங்களிற்கு குறிப்பாக அரசியல். இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்தல் கூடாது.

25 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய மனித நேய உதவிகளை வழங்கும் கடமையும் பொறுப்பும் தேசிய அதிகாரி களைச் சார்ந்தது.

26 மனித நேய உதவிகளை வழங்குபவர்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

27 மனித நேய உதவிகளை வழங்குவோர் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் பாதுகாப்பையும் உரிமையையும் மதித்து சர்வதேச நியமங்களையும் ஒழுங்கு விதிகளின் படி செயலாற்ற வேண்டும்.

## பிரிவு 05 : மீள் குடியேற்றம் தொடர்பான விதிகள்

28 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுடைய மீள் குடியேற்றம் சம்பந்தமாக அதிகாரிகள் கவனஞ் செலுத்தல் வேண்டும்.

29 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தாம் விட்டுச் சென்ற, இழந்த சொத்துக்களையும் உடமைகளையும் மீளப்பெற வழி செய்தல் வேண்டும்

30 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை துரிதமாகவும் இடையூறு மின்றி அவர்கள் தம் இருப்பிடங்களுக்கு திரும்பிச்செல்ல அல்லது மீளக் குடியேறி சமூதாயத்தில் இணைந்து கொள்ள உதவும் சர்வதேச மனித நேய நிறுவனங்களுக்கு அதிகாரிகள் அனுமதியும் வசதியும் அளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள

## (i) பிறப்புப் பதிவு சான்றிதழ்

பிறப்பு சான்றிதழானது, ஒருவரின் பிறப்பை அத்தாட்சிப் படுத்தும் ஆவணமாகும்.

ஒரு குழந்தை பிறந்த பின் பதிவு செய்தலானது மிக முக்கியமானது பாடசாலையில் சேர அடையாள அட்டை, கடவுச் சீட்டு போன்ற சகல ஏனைய ஆவணங்களையும் பெற பிறப்புச் சான்றிதழானது முக்கியமானதாகும்.

## பதிவு செய்வது எப்படி?

- குழந்தை பிறந்து 42 நாட்களுக்குள் தாய் அல்லது தந்தை அவ்விட பதிவாளருக்கு சகல விபரங்களையும் அறிவித்து. உரிய முறையில் விண்ணப்பத்தை மேற்கொண்டு விண்ணப்பிக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழந்தை மருத்துவமனையில் பிறந்தால் சில அரச மருத்துவ மனைகளில் பிறப்பைப் பதிவு செய்யும் காரியாலயங்கள் உள்ளன. அவற்றில் விண்ணப்பமொன்றைச் செய்வதன் மூலம் பிறப்பைப் பதிவு செய்யலாம். வீட்டில் அல்லது வேறு இடத்தில் குழந்தை பிரசவிக்கப்பட்டிருந்தால் பிறப்புப் பதிவாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

- பெற்றோரால் விண்ணப்பிக்க இயலாவிடின் வேறொருவர் மூலமாக, உரிய விபரங்களைக் கொடுப்பதன் மூலம் விண்ணப்பிக் கலாம்.

- மூன்று மாதங்களிற்குப் பின் பிறப்பைப் பதிவு செய்தல்

  இதற்கான விண்ணப்பத்தை மாவட்டப் பதிவாளர் பிரதேசச் செயலாளர் அல்லது பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதற்கான விசேட படிவமொன்றை பெறவேண்டும்.

- வலிதான திருமண பந்தத்தின் மூலம் பிறக்காத குழந்தையாயின் தாய், தந்தை இருவரும் வேண்டுகோள் கொடுப்பின் பதிவாளர் தந்தையின் பெயரைப் பதியலாம். இருவரும் பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிட வேண்டும் அல்லது நீதிமன்றத்தின் கட்டளையி னாலும் தந்தையின் பெயர் பதியப்படலாம்.

- இலங்கைக்கு வெளியே நடைபெற்ற பிறப்பு ஒன்றினைப் பதிவு செய்தல்.

  இலங்கைக்கு வெளியே நடைபெற்ற பிறப்பு ஒன்றினை பதிவு செய்வதானால் குழந்தை பிறந்த காலப் பகுதியில் தகப்பன் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும். இதற்குக் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

  (அ) காலம் தாழ்த்திய பிறப்பு பதிவு செய்வதற்கான பிரதிக்கினைப் பத்திரம்

  (ஆ) தந்தையின் பிரஜா உரிமையை வெளிப்படுத்தும் பிரதிக் கினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பிறப்பு நடைபெற்ற நாட்டின் மூலம் வழங்கப்பட்ட பிறப்பு அறிக்கையின் மூலப் பிரதியுடன் போட்டோப் பிரதி.

(ஈ) பெற்றோரின் கடவுச் சீட்டின் மூலப் பிரதியுடன் போட்டோப் பிரதி.

(உ) பெற்றோரின் திருமணச் சான்றிதழின் மூலப் பிரதியுடன் போட்டோ பிரதி உட்பட.

(ஊ) பிறப்புப் பதிவு செய்வதற்காக, வெளிவிவகார அமைச்சுக்கு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டு

- பிறப்புச் சான்றிதழை தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்துகொள்ள பதிவாளர் நாயகத் திணைக் களத்திற்கு அல்லது மொழி பெயர்ப்பாளர் உள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம். செலவினங்கள் செலுத்தப்பட வேண்டும்.

## (ii) மரணச் சான்றிதழ்

- உறவினர் அல்லது இறந்தவரின் வீட்டில் உள்ளோர் அல்லது

  இறுதிக் கடமைகளைச் செய்தவர் மரணப் பதிவுச் சான்றி தழுக்கு விண்ணப்பிக்கலாம்.

- சாதாரண மரணம் சம்பவித்து 5 நாட்களுக்குள் பதியப்பட வேண்டும்.

- மூன்று மாதங்களிற்குப் பின் இறப்புப் பதியப்பட மாவட்டப் பதிவாளர் அல்லது பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். விசேட படிவமொன்று பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

- ஒரு வருடத்திற்குப் பின் எனின் பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

- காணாமல் போனவர் தொடர்பாக விசேட நடவடிக்கைகளைப் பின்பற்றி அவர்தொடர்பில் மரணப் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (iii) திருமணப் பதிவுச் சான்றிதழ்

- திருமண அறிவித்தலானது திருமணப் பதிவாளருக்கு திருமணப் பதிவிற்கு 14 நாட்களுக்கு முன் கொடுபட வேண்டும்.
- இரு திறத்தவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாயின் ஒருவர் திருமண அறிவித்தல் கொடுத்தால் போதுமானது வெவ்வேறு மாவட்டமெனின் இருவரும் கொடுக்க வேண்டும். இரண்டு சாட்சிகள் கையொப்பமிட வேண்டும்.
- திருமணத்திற்கான விசேட அறிவிப்பு 14 நாட்களுக்குள் பதிவு செய்வதற்குக் கொடுக்கப்பட முடியும்.
- பொதுத் திருமணக் கட்டளைச் சட்டப்படி திருமண வயதெல்லை 18 வயதாகக் கொள்ளப்படும்.
- திருமணம் ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தால் அது சட்டத்தின் முன் வலிதான திருமணமாகக் கொள்ளப்படும். இலங்கையில் வழக்காறுகளைக் பின்பற்றித் திருமணம் செய்தல் வலிதானதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

### (iv) காணிப் பதிவு


காணிப் பதிவு என்பது சொந்தமான ஒரு காணி அல்லது வீடு தொடர்பாக காணி அலுவலகத்தில் பதியப்படுவதாகும். இதற்கு அவ் ஆதனத்திற்குரிய உறுதியே பதியப்படுவதாகும். உறுதியானது காணியில் ஒருவருக்குள்ள உரித்தைக் காட்டும். எனவே காணி உறுதியானது மிகவும் முக்கியமான ஆவணமாகும். இக் காணி உறுதியானது இடம்பெயரும் சமயத்தில் தொலைந்திருந்தால் அல்லது சேதமடைந்திருந்தால் காணி அமைந்துள்ள மாவட்டக் காரியாலயத்தில் காணிபதியப்பட்ட இலக்கம் அல்லது விபரத்தைக் கொடுப்பதன் மூலம் உறுதியின் பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம்

## உலர் நிவாரணம்



- உலர் நிவாரணம் என்பது அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவியாகும். ஒருவர் தனது இயல்பான வாழிடத்திலிருந்து வெளியேறி வேறு இடத்தில் வசித்துவரும் போது, நலன்புரி நிலையங்கள் உட்பட அவர் இந்நிவாரண உதவி பெற உரித்துடையவர்கள்.

- இடம்பெயர்ந்த ஒருவர் தான் தற்போது வசித்து வரும் இடத்து கிராமசேவகர்/ பிரதேச செயலாளரிடம் உரிய விண்ணப்ப மொன்றைச் செய்வதன் மூலம் உலர் நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

- உலர் நிவாரண அளவு குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக் கேற்பத் தீர்மானிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|
| 1 | 336/= |
| 2 | 616/= |
| 3 | 840/= |
| 4 | 1008/= |
| 5 | 1260/= |

இப் பெறுமதிக்கேற்ப உலர் பொருட்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

- ஒருவர் தனது சொந்த இடத்திற்குத் திரும்பிய பின் அல்லது மீளக்குடியேறிய பின் ஆறு மாதங்கள் வரை உலர் நிவாரணம் அரசிடம் பெற்றுக் கொள்ளலாம்

## ஒருங்கிணைந்த உதவித் திட்டப்பணக் கொடுப்பனவு (UAS)

இது ஒரு பணக் கொடுப்பனவாகும்

நிரந்தரமாக தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச் சென்று வாழுமிடத்து ஒவ்வொரு உள்நாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்களும் ரூபா 25,000/= வாழ்வினை கொடுப்பனவாகவும், ரூபா 75,000/= நிரந்தர வீடு ஒன்றை அமைப்பதற்காகவும் வழங்கப்படும்.

இவ் உதவிக்கொடுப்பனவுகளை விட நலன்புரி நிலையங்களில் மரணம் சம்பவித்தால் ஒரு சிறு தொகைப்பணம் வழங்கப்படும்.

(இத்தரவுகள் 24.11.2003 பெறப்பட்டதன் படியாகும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒரு இடம்பெயர்ந்த நபர் எனில் இக்கையேட்டில் குறிப்பிடப்பட்ட உரிமைகள், உங்களுக்கு மீறப்பட்டிருந்தால், அல்லது இங்கு குறிப்பிடப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் இடையூறுகளை எதிர் நோக்கினால், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிவாரண உதவிகளைப் பெறுவதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின், பின் அட்டையில் குறிப்பிட்டுள்ள எமது அலுவலக முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IDP Project
## Human Rights Commission of Sri Lanka
65/1, Muththaiyapillai Avenue, Ward Place, Colombo -07.
Tel/Fax : 011 2662587, 011 2665158
Email : hrccidp@sltnet.lk

**AMPARA**
23/1, Dutugemunu Street,
Ampara
Tel/Fax : 063-2222340

**ANURADHAPURA**
206/1, Godage Mawatha,
Anuradhapura.
Tel/Fax : 025-2221451

**BADULLA**
9/2, Banadarawela Road
Badulla
Tel/Fax : 055-2229634

**JAFFNA**
20, Somasundaram Avenue,
Jaffna
Tel : 021-2225470
Tel/Fax : 021-2222021
E-mail: rvpk@sltnet.lk

**TRINCOMALEE**
97, Customs Road,
Trincomalee
Tel : 026-2222607, 026-2227074
E-mail : hrct@sltnet.lk

**BATTICALOA**
16, Covington Road,
Batticaloa
Tel : 065-2225647
Tel/Fax : 065-2224420
E-mail : hrcb@sltnet.lk

**KANDY**
839/2A, Paradeniya Road,
Kandy
Tel/Fax : 08-12222855

**MATARA**
12/42, Broadway Road,
Matara
Tel/Fax : 041-2226533

**KALMUNAI**
80, Main Street,
Kalmunai
Tel/Fax : 067-222 9728

**VAVUNIYA**
129, Kandasamy Kovil Road,
Vavuniya
Tel : 024-2222029, 024-2221060
E-Mail : hrcv@sltnet.lk

**IDP PROJECT MANNAR**
405, Old Moor Street,
Uppukkulam, Mannar
Tel : 023-2232341
E-mail : hrcmidp@sltnet.lk

**IDP PROJECT, PUTTALAM**
3/1, Service Road,
Puttalam
Tel : 032-2265343
E-mail : hrcpidp@sltnet.lk

(Sponsored by : UNHCR)

# HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

No. 36, Kynsey Road,
Colombo 08.
Tel : 011 2694925, 011 2673806, 011 2685981, 0112685339
Fax: 011 2694924
Hot Line : 011 2689064
E-mail : sechrc@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org